தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 174 | 4 Pages | 21.1.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 174 | 4 பக்கங்கள் | 21.1.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா**
**செய்யாமை மாசற்றார் கோள்**

**விளக்கம்:** ஒருவன் கறுவுகொண்டு துன்பம் செய்த போதிலும் அவனுக்கு திரும்ப துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.

# இந்தியா கூட்டணி முதல்மந்திரிகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜன.21

இந்தியா கூட்டணி முதல்மந்திரிகளுக்குதமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதி உள்ள கடிதத்தில் கூறியதாவது:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கடந்த 912025 அன்று பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதிநிலைக்குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென்றும். இளங்கலை, முதுகலைப் பட்டப் படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்த பட்ச வரைவு நெறிமுறைகள் 2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள்2025 ஆகிய இரண்டு வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், மேற்படி தீர்மானம் போன்று டெல்லி, இமாச்சல பிரதேசம். ஜம்முகாஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலுங்கானா சட்டமன்றப் பேரவைகளிலும் நிறைவேற்றி மத்திய அரசை வலியுறுத்திட வேண்டும்.




பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமனத்தில் மாநில அரசுகளின் பங்கைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வுகளை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் பல்கலைக்கழக நிதிநிலைக்குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் குறித்து மாநில முதல்மந்திரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பல்கலைக்கழக நிதிநிலைக்குழுவின் இந்த வரைவு நெறிமுறைகளை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி ஏற்கெனவே தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களும் இதே போன்ற நிலைப்பாட்டை எடுப்பது அவசியம் என தான் உறுதியாக நம்புகிறேன். தமிழக சட்டமன்றம் நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தைப் போன்று தங்களது மாநில சட்டமன்றங்களிலும் இது தொடர்பாக தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று டெல்லி, இமாச்சல் பிரதேசம், ஜம்முகாஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் தெலுங்கானா முதல்மந்திரிகளை கேட்டுக் கொள்கிறேன். பல்கலைக்கழக நிதிநிலைக்குழுவின் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் மாநில அரசுகளின் உரிமைகளைத் தெளிவாகமீறும்செயல். இது நமது பல்கலைக்கழகங்களின் சுயாட்சியில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தும்.

அதிகாரத்தை மையப்படுத்தி, நமது நாட்டின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் மத்திய அரசின் இந்த முயற்சிகளுக்கு எதிராக நாம் ஒற்றுமையாக நிற்பது மிகவும் முக்கியம். எனவே தனது இந்தக் கோரிக்கையை மேற்குறிப்பிட்ட மாநில முதல்மந்திரிகள் பரிசீலித்து, தங்களது மாநில சட்டமன்றங்களில் இதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைதிப்படை 'அமாவாசை'தான் எடப்பாடி பழனிசாமி: அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கு



சென்னை, ஜன.21

மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

நாம முன்னுக்கு வரணும்னா நாய் என்ன... மனுஷன் என்ன? ஏறி மிதிச்சு போயிட்டே இருக்கணும் 'அமைதிப்படை' படத்தில் வரும் டயலாக் இது. அதில் வரும் 'அமாவாசை' கேரக்டர் தான் எடப்பாடி பழனிசாமி. பலரை ஏறி மிதித்து, ஊர்ந்து சென்று, பதவியைப் பிடித்த பழனிசாமி, திமுக ஆட்சிக்கு இன்னும் 13 அமாவாசைதான் இருக்கிறது என நேற்று பேசியிருக்கிறார்.

ஆட்சியை இழந்த இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் அமாவாசையையென உருட்டியே அரசியல் செய்து கொண்டிருக்கிறார் பழனிசாமி. 2024ம் வருடம் சட்டசபைக்கும் தேர்தல் வரும். இன்னும் 27 அமாவாசைகள் மட்டுமே ஸ்டாலின் முதல்அமைச்சராக இருக்க முடியும். மீண்டும் அதிமுக அரசுதமிழகத்தில் அமையும் 2022 பிப்ரவரி 12. சேலம், தாரமங்கலம். இன்னும் 28 அமாவாசைகள் மட்டுமே திமுக அரசு ஆட்சியில் இருக்கும் 2024 ஜனவரி 25. எக்ஸ் தளபதிவு.....

திமுக ஆட்சியின் ஆயுட் காலம் 19 அமாவாசைகள்தான். நாட்கள் எண்ணப்படுகின்றன 2024 செப்டம்பர் 20. எக்ஸ் தளப்பதிவு.

இப்படி ஒவ்வொரு அமாவாசைக்கும் எடப்பாடி பழனிசாமி கணக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். அமாவாசைகள்தான் கடந்து சென்று கொண்டிருக்கிறன. ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் போட்டியிடாமல் புறமுதுகிட்டு ஓடும் 23ம் புலிகேசி எடப்பாடி பழனிசாமி, இன்னும் 100 பவுர்ணமிகளுக்கு மு.க.ஸ்டாலின்தான் முதல் அமைச்சராக தொடர்வார் என்பதை 2026ல் உணர்ந்து கொள்வார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு, பேட்டரி ஆட்டோ வழங்கும் நிகழ்ச்சி

தென்காசி, ஜன.21

தென்காசி இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI வங்கி) மூலம், தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு, பேட்டரி ஆட்டோ வழங்கும் நிகழ்ச்சி ,இணை இயக்குனர் நலப்பணிகள் பிரேம்லதா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மருத்துவமனை குழந்தைகள் நலப் பிரிவு தலைவர் மருத்துவர் கீதா வரவேற்புரை ஆற்றினார்.

ஐ டி பி ஐ வங்கியின் தெற்கு பிராந்திய தலைவர் சால்வின் சிவராமன் , மதுரை வங்கிக் கிளையின் மேலாளர் சிவாஜி கணேசன் மற்றும் தென்காசி வங்கி கிளை மேலாளர் முத்துக்குமார் முன்னிலையில், சுமார் மூன்று லட்சம் மதிப்புள்ள பேட்டரி ஆட்டோ ஒன்றினை மருத்துவமனை பயன்பாட்டிற்காக, மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின் ஒப்படைத்தனர்.

ஐ டி பி ஐ வங்கியின் தெற்கு பிராந்திய மேலாளர் சால்வின் சிவராமன் பேசும்போது, தென்காசி மருத்துவமனை தமிழகத்தில் கண்காணிப்பாளர் ஜெஸ்லின் தலைமையில் சிறந்த மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் நலனுக்காகஅவரின் வேண்டுகோளுக்கிணங்க,இந்த வாகனத்தை சி எஸ் ஆர் நிதி மூலம் வழங்குகிறோம். மேலும் வரும் ஆண்டுகளில் தொடர்ந்து CSR நிதி மூலம் பொதுமக்களின் சிகிச்சைக்கு தேவையான உபகரணங்களை வாங்கி வழங்க தயாராக உள்ளோம் என கூறினார்.



நிகழ்ச்சியில் மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின் பேசும் போது ,தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து பல நிறுவனங்களிடமும்,தன்னார்வலர்களிடமும் நோயாளிகளின் நலனுக்காக மருத்துவமனைக்கு தேவைப்படும், உபகரணங்களை வாங்கி வழங்கவும்,கட்டிட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் கோரிக்கை விடுத்திருந்தோம். அதன் அடிப்படையில் தென்காசி ZOHO நிறுவனம் ,தென்காசி ரோட்டரி சங்கம், லயன்ஸ் கிளப், தென்காசி மர வியாபாரி சங்கம், ஆவுடையானூர் சி ஜே மருத்துவமனை , சுரண்டை பொன்ரா மருத்துவமனை , K. ராஜேந்திரன் ரோட்டரி சங்கம், VTSR. அருணாச்சல செட்டியார் அரசு ஒப்பந்ததாரர் , சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் , முன்னாள் மாவட்ட செயலாளர் சிவ பத்மநாபன் , கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண முரளி , வாசுதேவநல்லூர்சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் சதன் திருமலை குமார் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் இராஜா மற்றும் தென்காசி மாவட்ட பொதுமக்கள் பலரும் தென்காசி மருத்துவமனைக்கு அன்பளிப்புகள் பல செய்துள்ளனர்.


இந்த வாகனம் நோயாளிகளுக்கு உணவு எடுத்துச் செல்வதற்கும், மருந்து கிடங்கில் இருந்து மருந்துகள் ஒவ்வொரு வார்டுகளுக்கு எடுத்துச் செல்வதற்கும் மிகவும் உபயோகமாக இருக்கும். ஏற்கனவே தென்காசி மரபு வியாபாரிகள் சங்கத்தின் மூலம் மருத்துவமனைக்கு மூன்று வருடங்களுக்கு முன் பேட்டரி கார் ஒன்று வழங்கப்பட்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.தென்காசிமருத்துவமனைக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பல உபகரணங்களை வாங்கி வழங்கியும், கட்டிட பராமரிப்பு பணிகளை செய்து உதவிய நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர் அனைவர்க்கும் தென்காசி மருத்துவமனை நிர்வாகம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்ச்சியில் தென்காசி மாவட்டத்தில்வளர்ந்துவரும்நிறுவனங்கள் சி எஸ் ஆர் நிதியின் மூலம் நோயாளிகளின் நலன் கருதி மருத்துவமனை மேம்பாட்டிற்கு தேவையான உபகரணங்களை வாங்கி வழங்க முன் வர வேண்டும் என மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜெஸ்லின் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அலுவலர் மருத்துவர் ராஜேஷ் நன்றியுரை வழங்கினார். உறைவிட மருத்துவர் செல்வ பாலா ,மருத்துவர் சங்கரி, செவிலிய கண்காணிப்பாளர் பத்மாவதி, முத்துலட்சுமி, மூத்த மருந்தாளுனர் ராமச்சந்திரன், கோமதி ,ஆய்வக நுட்புனர் ஹல்க்,மற்றும் அனைத்து மருத்துவமனை பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் தென்காசி மாவட்டத்தில்வளர்ந்துவரும்நிறுவனங்கள் சி எஸ் ஆர் நிதியின் மூலம் நோய்களின் மக்கள் நலன் கருதி மருத்து

## பீகார்: கங்கையில் படகு கவிழ்ந்து விபத்து; 3 பேர் பலி




பாட்னா, ஜன.21

பீகார் மாநிலம், கதிஹார் மாவட்டத்தில் 17 பேருடன் கங்கையில் சென்ற படகு அம்தாபாத் பகுதியில் உள்ள கோலாகாட் அருகே இன்று காலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில் 3 பேர் பலியானார்கள். இதுவரை 10 பேர் மீட்கப்பட்டுள்ளனர், அவர்களில் பெரும்பாலோர் கரைக்கு நீந்திச் சென்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மாயமான 4 பேரை மீட்கும் பணி இன்னும் நடந்து வருகிறது.

இந்த விபத்து குறித்து அறிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாவட்ட கலெக்டர் மனேஷ் குமார் மீனா தெரிவித்தார். பலியானவர்களில் இருவர் பவன் குமார் (60) மற்றும் சுதிர் மண்டல் (70) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றவரை இன்னும் அடையாளம் காண முடியவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

## அதிக சத்தத்துடன் பாட்டு கேட்டதால் வாக்குவாதம்; பக்கத்து வீட்டுக்காரர் அடித்துக் கொலை

போபால், ஜன.21

மத்திய பிரதேச மாநிலம் அசோக் நகர் மாவட்டத்தில் உள்ள கொராகலா பகுதியை சேர்ந்தவர் கலுவா அஹிர்வார். இவரது பேத்தி 12ம் வகுப்பு படித்து வருகிறார். இவர்களது பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் அதிக சத்தத்துடன் பாட்டு கேட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக இருவீட்டாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில், இது தொடர்பாக கலுவா அஹிர்வாரின் குடும்பத்தினர் போலீசில் புகார் அளித்துள்ளனர். பின்னர் போலீசார் அங்கு வந்து, பக்கத்து வீட்டுக்காரர்களின் ஹோம் தியேட்டரை பறிமுதல் செய்து கொண்டு சென்றுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த கலுவா அஹிர்வாரின் பக்கத்து வீட்டுக்காரர்களான ரதிராம் அஹிர்வார் மற்றும் முகேஷ் அஹிர்வார் ஆகியோர் சண்டையிட்டு வாக்குவாதம் செய்துள்ளனர். பின்னர் கட்டை, மண்வெட்டி உள்ளிட்டவற்றை கொண்டு கலுவா அஹிர்வாரை அவர்கள் அடித்துக் கொன்றுள்ளனர்.

இந்த கொலை சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த போலீசார், கலுவா அஹிர்வாரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். தொடர்ந்து கொலை குற்றவாளிகளான ரதிராம் மற்றும் முகேஷ் ஆகியோரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கோவாவில் பாராகிளைடர் விபத்தில் சிக்கியது; பெண் சுற்றுலா பயணி, பயிற்சியாளர் பலி



பனாஜி, ஜன.21

மராட்டிய மாநிலம் புனேவை சேர்ந்த ஷிவானி டேபிள் (வயது 27) என்ற பெண் கோவாவுக்கு சுற்றுலா வந்தார். அவர் கோவா இயற்கை அழகை ரசிக்க வானில் பறக்கும் பாராகிளைடரில் பறக்க திட்டமிட்டார். அதன்படி அவர் வடக்கு கோவாவில் பாராகிளைடிங் நிறுவனம் ஒன்றை நாடினார்.

அதன்படி ஷிவானி பயிற்சியாளர் சுமல் (26) என்பவருடன் பாராகிளைடரில் பாறையிலிருந்து பறந்தார். ஆனால் பாராகிளைடர் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கேரி என்ற கிராமம் அருகே ஒரு பள்ளத்தாக்கில் பாராகிளைடிங்கின் கயிறு திடீரென அறுந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில் பாராகிளைடிங் சேவை வழங்கிய நிறுவனம் அனுமதியின்றி இயங்கியது தெரியவந்தது. இதையடுத்து அந்த நிறுவன உரிமையாளர் சேகர் ரைசாதா மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதலில் ஒரு பக்க கயிறு அறுந்ததில் அவர்கள் பாறைகள் மீது சரமாரி மோதி உடல் முழுவதும் சிராய்ப்புகள் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

## மரத்தின் மீது கார் மோதி விபத்து 3 பேர் பலி



லக்னோ, ஜன.21

உத்தர பிரதேச மாநிலம் மகாராஜ்கஞ்ச் மாவட்டம் நிஹ்லாலு பகுதியில் இருந்து குஷிநகர் மாவட்டத்திற்கு நேற்று இரவு கார் சென்றுகொண்டிருந்தது. அந்த காரில் ராகேஷ் (வயது 23), சோபித் (வயது 30), தேவானந்த் (வயது 28) ஆகிய 3 பேர் பயணித்தனர். உறவினர்களை சந்தித்துவிட்டு 3 பேரும் காரில் குஷிநகரில் உள்ள தங்கள் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தனர். நள்ளிரவு குஷிநகர் மாவட்டத்தின் பஹுவார் கிராமம் அருகே சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோர மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் காரில் பயணித்த 3 பேரும் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், 3 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தர்மபுரியில் நாட்டு வெடி வெடித்து 6 வயது சிறுமி உயிரிழப்பு



தர்மபுரி, ஜன.21

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே நாட்டு வெடி வெடித்து 6 வயது சிறுமி கவிநிலா உயிரிழந்துள்ளார். பொங்கல் விடுமுறையையொட்டி பூமாண்ட அள்ளி கிராமத்தில் உள்ள பாட்டி வீட்டிற்கு வந்திருந்த சிறுமிக்கு இந்த சோகம் நேர்ந்துள்ளது.

பக்கத்து வீட்டு மாடியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி, அங்கிருந்த நாட்டு வெடியை தெரியாமல் மிதித்ததால் விபத்து ஏற்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கு வாங்கி மீதம் இருந்து நாட்டு வெடியை மாடியின் மீது வைத்திருந்த நிலையில் விபரீதம் நடந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மயிலாடுதுறையில் பரவலாக மழை: அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் நீரில் சாய்ந்தன, விவசாயிகள் வேதனை



குத்தாலம், ஜன.21

மயிலாடுதுறை மாவட்டத்தில் தற்போது சுமார் 1 லட்சத்து 70 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்துள்ளனர்.

இவற்றில் 60 சதவீதத்துக்கு மேல் கதிர்கள் முற்றிய நெற்பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன.

இதனை கருத்தில் கொண்டு மயிலாடுதுறை மாவட்டத்தில் 175 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக நிரந்தர கட்டிடம் உள்ள 60 கொள்முதல் நிலையங்கள் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக திறக்கப்பட்டன.

தற்போது விவசாயிகள் அறுவடையை தொடங்க திட்டமிட்டிருந்த நிலையில் நேற்று மயிலாடுதுறை மாவட்டத்தில் கன மழை பெய்தது.

தரங்கம்பாடி, நல்லத்துக்குடி, சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில், கொள்ளிடம், திருமுல்லைவாசல், பழையாறு, திருவெண்காடு, பூம்புகார், வானகிரி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகள் முழுவதும் மழை பெய்தது.

இதன் காரணமாக மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த கதிர்கள் முற்றிய நெற்பயிர்கள் மற்றும் இளம்பயிர்கள் சாய்ந்து நீரில் மூழ்கியுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் இன்றும் மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள நிலையில் மழை நீடித்தால் மழைநீர் வடிய வழி இன்றி நெற்பயிர்கள் நீரில் மூழ்கி நெல் முளைத்து விடும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

6 மணி வரையிலான நிலவரப்படி மயிலாடுதுறையில் 104.80 மில்லி மீட்டர் மழையும், மணல்மேடு 23 மி.மீ, சீர்காழி 50.80 மி.மீ, கொள்ளிடம் 10.20 மி.மீ, தரங்கம்பாடி 117.20 மி.மீ, செம்பனார் கோவில் 114.60 மி.மீ மழை பெய்துள்ளது.

# இறுதிச்சடங்குக்கு கூட அனுமதிக்கவில்லை.. உயிரிழந்த யூடியூபர் ராகுலின் மனைவியும் தாயும் மாறி மாறி குற்றச்சாட்டு



ஈரோடு, ஜன.21

ஈரோடு கருங்கல்பாளையத்தை சேர்ந்த பிரபாகரன் சாகிதா தம்பதிகளின் ஒரே மகன் ராகுல் (27).

என்ஜினீயரிங் பயின்ற ராகுல் டிக் டாக் மூலம் பிரபலமானவர். கடந்த சில வருடங்களாக இன்ஸ்டாகிராமில் பல்வேறு வாழ்க்கை சம்பவங்களையும், சினிமா பாடல்கள், வசனங்களை நகைச்சுவை உணர்வு களோடு பதிவு செய்து ஏராளமான ரசிகர்களின் ஆதரவை பெற்று இருந்தார்.

இவர் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி, நேரு நகரைச் சேர்ந்த தேவிகா ஸ்ரீ என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

இந்நிலையில் பொங்கல் விடுமுறைக்காக சொந்தஊர்சென்று இருந்த தன் மனைவியை பார்க்க கவுந்தப்பாடிக்கு கடந்த 16ந் தேதி இரவு தனது இருசக்கர வாகனத்தில் ராகுல் சென்றார்.

அப்போது சாலையின் வளைவில் திரும்ப முயற்சி செய்தபோது எதிர்பாராத விதமாக இருசக்கர வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த தடுப்பின் மீது மோதியது.

இதில் தலை மற்றும் கைகளில் பலத்த காயமடைந்த ராகுல் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். ராகுல் மரணம் அவரை பின் தொடர்ந்த ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

இதற்கிடையே ராகுலின் மனைவி தேவிகாஸ்ரீ தனது மாமியார் குடும்பத்தினர் குறித்து பரபரப்பு குற்றச்சாட்டுகூறியுள்ளார்.

இது தொடர்பாக பேசிய தேவிகாஸ்ரீ, "ராகுல்இன்ஸ்டாகிராம் மூலமாக தான் எனக்கு பழக்கமானார். எங்களுக்கு கவுந்தப்பாடி புது மாரியம்மன் கோவில் திருமணம் நடந்தது.

அதற்கு பின்னர் தான் அவர் ஏற்கனவே திருமணமானவர் என்ற விவரம் எனக்கு தெரிந்தது. கோவை சேர்ந்த பெண்ணுடன் பெண்ணுடன் ராகுல் 6 மாதம் வாழ்ந்துள்ளார். அதன் பின்னர் எனது மாமியாரின் தொந்தரவால் அந்த பெண் பிரிந்து சென்று விட்டார். அதன் பிறகு அந்தப் பெண்ணுக்கும் என் கணவருக்கும் விவாகரத்து ஆனது.

இருந்தாலும் இதனை நான் ஏற்றுக்கொண்டு அவருடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். நாங்கள் ஓர் ஆண்டாக மாமியார் வீட்டில் தான் வசித்து வந்தோம். அதன் பின்னர் தான் ஈரோடு வளையகார வீதியில் தனிக்குடித்தனம் வந்தோம். இந்நிலையில் தான் ராகுலுக்கு குடிப்பழக்கம் ஏற்பட்டுள்ளது.

எனது மாமியார் ராகுல் மது குடிப்பதை ஊக்குவித்தார். இது தொடர்பாக என் மாமியாரிடம் நான் கேட்ட போது எனக்கும் அவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டது. ராகுலும் என்னை அடித்து துன்புறுத்தினார். ஆனால் இதையும் தாண்டி அவருடன் நான் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன்.

ராகுலுக்கு சினிமா மற்றும் பைக் மீது அதிக இஷ்டம். அவரிடம் அதிகமாக குடிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி வந்தேன். ஆனால் அவர் அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இந்நிலையில் கடந்த 16ந் தேதி இரவு என்னை பார்ப்பதற்காக ராகுல் தனது மோட்டார் சைக்கிளில் கவுந்தப்பாடி நோக்கி வந்த போது தான் சாலை விபத்தில் உயிரிழந்தார்.

அதன்பின் எனது மாமியார் வீட்டினர் என்னை முழுவதுமாக ஒதுக்கி வைத்தனர். ராகுலின் இறுதி காரியத்துக்கு கூட என்னை அனுமதிக்கவில்லை. கணவரை இழந்த வேதனையில் உள்ளேன்.

என் மாமியார் வீட்டினர் ராகுலின்ஆதார்மொபைல் போன்உள்ளிட்ட பொருட்களை கேட்டு எனக்கு போன் செய்தனர். ராகுலுடன் நான் வாழ்ந்ததை மறைக்க நினைக்கின்றனர்.

ஆனால் அந்த பொருட்களை அவர்களுக்கு தர மாட்டேன். அவருடன் நான் வாழ்ந்ததற்கு அது தான் ஆதாரம்" என்று தெரிவித்தார்.

மருமகள் குற்றச்சாட்டைதொடர்ந்து ஈரோட்டில் வசிக்கும் ராகுலின் தாய் சாகிதா கூறியதாவது:

நேரம் சரியில்லை என்று கூறி எனது மகனும், மருமகளும் தனி குடித்தனம் சென்றனர். என் மகளைப் போலத்தான் எனது மருமகளை நாங்கள் பார்த்துக் கொண்டோம். எனது மகன்ராகுலுக்கு மது குடிக்கும் பழக்கம் கிடையாது. என் மகன் நினைவாக உள்ள பொருட்களை கேட்டோம்.

மருமகளை அழைத்து வர சென்ற போதுதான் விபத்தில் ராகுல் சிக்கி உயிரிழந்தார். நான் ராகுலுக்கு மது வாங்கி கொடுக்கவில்லை. என் மகன் நல்லவன். என் மருமகளை நான் எந்த ஒரு தொந்தரவும் செய்யவில்லை" என்று தெரிவித்தார்.

# 4 தலைமுறை வாரிசுகளுடன் 110வது பிறந்த நாள் கொண்டாடிய மூதாட்டி மரணம்



பண்ருட்டி, ஜன.21

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த மேலிருப்பு கிராமத்தை சேர்ந்தவர்கள் சந்திர படையாட்சிராசாம்பாள் தம்பதியினர். இவர்களுக்கு 14 பிள்ளைகள் இருந்த நிலையில் 7 பேர் இறந்து விட்டனர். கடந்த 2011ம் ஆண்டு சந்திர படையாட்சி உடல்நிலை குறைவால் இறந்துள்ளார். இதை தொடர்ந்து கடைசி மகனான ஞானசேகரன் அவரது மனைவி தமிழ்ச்செல்வி பராமரிப்பில் ராசாம்பாள் வாழ்ந்து வந்தார். ராசாம்பாளுக்கு 110 வயதான நிலையில், அவரது பிறந்த நாளை கடைசி மகன் ஞானசேகரன் உள்ளிட்ட 7 பிள்ளைகள், மருமகள்கள், பேர குழந்தைகள், கொள்ளு பேரப்பிள்ளைகள் என அவரது உறவினர்கள் சூழ 4 தலைமுறை வாரிசுகளுடன் 110வது பிறந்த நாளை சமீபத்தில் மூதாட்டி ராசாம்பாள் கொண்டாடினார்.

ஊரையே அழைத்து கறி விருந்து வைத்து திருவிழா போல 110வது பிறந்தநாள் மிக விமர்சையாக கொண்டாடினர். இந்த நிகழ்ச்சி அப்பகுதி மட்டுமின்றி சுற்று வட்டார மக்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. பெற்றோர்களை ஆதரவற்றோர் இல்லத்தில் விட்டு செல்லும் பிள்ளைகளின் மத்தியில் 110 வயது வரைதனது தாயை பராமரித்து வந்து 110வது பிறந்த நாளை கறி விருந்துடன் திருவிழா போல கொண்டாடிய ஞானசேகரன் மற்றும் அவரது உறவினர்களின் செயல் அப்பகுதி மக்களிடையே பாராட்டப்பட்டது.

இந்த நிலையில மூதாட்டி ராசாம்பாளுக்கு நேற்று திடீர் உடல்நல குறைவு ஏற்பட்டது. பண்ருட்டி தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்குசிகிச்சை பலனளிக்காமல் மூதாட்டி ராசாம்பாள் உயிரிழந்தார். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக மேலிருப்பில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.



சாம்பவர்வடகரை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் கடந்த 17.01.2025 நதேதி தொலைத்த பர்சை துரிதமாக செயல்பட்டு சிசிடிவி கேமரா மூலம் கண்டு பிடித்து அதில் இருந்த 25 கிராம் தங்க சங்கிலி பணம் ரூபாய் 1300 ₹ மற்றும் ஆதார் அட்டை ஓட்டுனர் உரிமம் ஆகியவற்றை உரியவரான சாம்பவர்வடகரை ரெட்டைத்தெருவை சேர்ந்த லெனின் மனைவி மகேஸ் என்பவரிடம் காவல்துறை உதவி ஆய்வாளர் திரு.சதீஷ் அவர்கள் காவலர் மகேஷ்குமார்,பெண் காவலர் மாரியம்மாள் தனிப்பிரிவு காவலர் ஸ்ரீதர் ஆகியோர் ஒப்படைத்தனர்

# இலங்கையில் இருந்து திருச்சிக்கு வந்த விமானத்தில் கேட்பாரற்று கிடந்த ரூ.79 லட்சம் மதிப்பிலான தங்கம்



திருச்சி, ஜன.21

திருச்சி விமான நிலையத்தில் இருந்து உள்நாடு, வெளிநாடுகளுக்கு அதிக அளவில் விமானங்கள் இயக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், ஓமன், துபாய் உள்ளிட்ட நாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இவை தவிர உள்நாட்டு விமான சேவைகளாக சென்னை, பெங்களூர், ஹைதராபாத், மும்பை உள்ளிட்ட நகரங்களுக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டு வருகிறது. உள்நாட்டு விமான சேவைகளை இண்டிகோ விமானம் இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு இயக்கப்படும் விமானங்களில் அதிக அளவில் தங்கம் கடத்தப்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் வகையில் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர் சோதனை நடத்தி கடத்தல் தங்கத்தை பறிமுதல் செய்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக குறைந்திருந்த தங்கம் கடத்தல் மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த 15ந் தேதி இலங்கை தலைநகர் கொழும்புவில் இருந்து திருச்சி விமான நிலையத்திற்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் வந்தது. இந்த விமானத்தில் பயணிகள் அனைவரும் இறங்கிய பிறகு சுத்தம் செய்வதற்காக பணியாளர்கள்விமானத்தில்நுழைந்த போது கழிவறையில் கேட்பாரற்று பை கிடந்தது. இதுபற்றி சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விமானத்தில் உள்பகுதிக்கு வந்த சுங்கத்துறை அதிகாரிகள் கழிவறையில் கிடந்த பையை கைப்பற்றி சோதனை நடத்தினர். அப்போது அந்த பையினுள் ரூ.79 லட்சம் மதிப்பிலான 985 கிராம் எடையுள்ள 2 தங்க கட்டிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள் இதனை விமானத்தில் விட்டு சென்றவர்கள் யார்? அதிகாரிகளின் சோதனைக்கு பயந்து விட்டு சென்றனரா? என்பது குறித்து தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்ட நாட்களுக்கு பிறகு திருச்சி விமான நிலையத்தில் கடந்த சில நாட்களில் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதில் நேற்று ஒரே நாளில் 985 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் நேற்று திருச்சி விமான நிலையத்திலிருந்து இலங்கை தலைநகர் கொழும்புவிற்கு ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட தயாராக இருந்தது. இந்த விமானத்தில் பயணம் செய்ய இருந்த பயணிகளின் உடைமைகளை மத்திய வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சோதனை செய்து கொண்டு இருந்தனர் அப்போது சந்தேகத்திற்கு இடமான பயணி ஒருவரின் உடமைகளை சோதனை செய்த போது அவர் தனது உடமையில் மறைத்து வெளிநாட்டிற்கு கடத்த இருந்த ரூபாய் 435 வெளிநாட்டு பணங்கள் அதன் இந்திய ரூபாயின் மதிப்பு ரூபாய் 3,72,000 மற்றும் இந்திய ரூபாய் நோட்டுகள் 30000 என மொத்தம் 4,02,000 மதிப்பிளான இந்திய மற்றும் வெளிநாட்டு பணங்கள் பறிமுதல் செய்தது குறிப்பிடத்தக்கது மேலும் அந்த பயணியிடம் சுங்கத்துறை அதிகாரிகள் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# முக்காணிப்பட்டியில் ஜல்லிக்கட்டு கோலாகலம் 600 காளைகள், 300 வீரர்கள் பங்கேற்பு



புதுக்கோட்டை, ஜன.21

புதுக்கோட்டை மாவட்டம் வடவாளம் ஊராட்சி முக்காணிப்பட்டியில் புனித ஆரோக்கிய அன்னைதேவாலய பொங்கல் விழாவை முன்னிட்டு இன்று ஜல்லிக்கட்டு நடைபெற்றது. போட்டி தொடங்கும் முன்பாக மாடு பிடி வீரர்கள் மற்றும் அதிகாரிகள் விழா கமிட்டியினர் முன்னிலையில் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 600 காளைகள் 300 மாடு பிடி வீரர்கள் கலந்து கொண்டனர். முதலில் கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக காளைகள் களத்தில் அவிழ்த்து விடப்பட்டன.

வெற்றி பெற்ற வீரர்களுக்கும் காளைகளுக்கும் ரொக்க பரிசுகள் மற்றும் சைக்கிள், பைக், குக்கர், டிரஸ்சிங் டேபிள் உட்பட பல பொருட்கள் வழங்கப்பட்டது.

# வீட்டுக்குள் புகுந்து பொருட்களை சூறையாடிய காட்டு யானை



கவுண்டம்பாளையம், ஜன.21

பெரியநாயக்கன்பாளையம் அடுத்த கூடலூர் நகராட்சி பகுதியில் கடந்த 3 நாட்களாக ஒற்றை ஆண் காட்டு யானைமுகாமிட்டு அங்குள்ள குடியிருப்பு பகுதிகளில் புகுந்து அட்டகாசம் செய்து வருகிறது.

மேலும் அந்த பகுதியை சேர்ந்த விவசாயி வேலுமணி என்பவர், காட்டு யானை தாக்கியதில் பரிதாபமாக உயிரிழந்தார். அதே யானை தொடர்ந்து ஒவ்வொரு கிராமமாக புகுந்து விடியும்வரை பொதுமக்களை அலற விட்டு வருகிறது.

தெக்குபாளையம் கென்னடி தென்றல் அவின்யூ பகுதியில் வடமாநில தொழிலாளர்கள் 4 பேர் தங்கியிருந்து கட்டிட வேலைக்கு சென்று வருகின்றனர். அவர்கள் நேற்றிரவு வீட்டில் கதவை திறந்து வைத்துவிட்டு சமையல் பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்தனர்.

இந்த நிலையில் வனத்தில் இருந்து வெளியேறிய ஒற்றை காட்டு யானை தெக்கு பாளையம் தென்றல் அவின்யூ பகுதிக்கு வந்தது. பின்னர் அது வாலிபர்கள் தங்கிய வீட்டின் முன்பாக வந்து நின்றது.

இதற்கிடையே வீட்டு வாசல் முன்பு நின்ற காட்டு யானையை பார்த்து வாலிபர்கள் அதிர்ச்சி அடைந்தனர். தொடர்ந்து அவர்கள் சமையல் கியாஸ் அடுப்பை அவசரம்அவசரமாக அணைத்துவிட்டு சுவர் ஓரமாக பதுங்கி கொண்டனர்.

தொடர்ந்துஅந்தயானை தலையின் முன்பகுதியை மட்டும் வீட்டுக்குள் நுழைத்து, அங்கிருந்த டப்பாவை தும்பிக்கையால் இழுத்து கீழே கொட்டி விட்டு அரிசியை மட்டும் தின்றது. மேலும் வீட்டுக்குள் இருந்த சமையல் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் இழுத்து வெளியே வீசி எறிந்தது. அதன்பிறகு அந்த யானை வெளியேறி சென்றது.

ஆனால் ஒரு சில நிமிடங்களில் மீண்டும் அதே வீட்டுக்கு திரும்பி வந்த காட்டு யானை, ஒரு காலை மட்டும் வீட்டுக்குள் எடுத்து வைத்து, பாதி உடம்பை உள்ளே புகுத்திக்கொண்டு தும்பிக்கையால் மீண்டும் பொருட்களை தேடியது.

அப்போது வீட்டுக்குள் பதுங்கி இருந்த தொழிலாளர்கள், சமைப்பதற்காக வைத்திருந்த அரிசிப்பையை தூக்கி போட்டனர். தொடர்ந்து அந்த யானை அரிசிப்பையை இழுத்துக்கொண்டு வீட்டில் இருந்து வெளியேறியது.

இதுகுறித்துதகவலறிந்த வனத்துறையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர் அங்கு பட்டாசு வெடித்து காட்டு யானையை மீண்டும் வனத்துக்குள் விரட்டினர்.

# மளிகை கடையில் மண்ணெண்ணெய் குண்டு வீச்சு

கரூர், ஜன.21

கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட கருப்பகவுண்டன் புதூர் மேற்கு, கங்கா நகர் பகுதியை சேர்ந்தவர் சுப்பிரமணி (வயது 52). இவருக்கு தமிழரசி (42) என்ற மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். இவர் கங்கா நகர் சந்திப்பில் அமைந்துள்ள தனக்கு சொந்தமான வீட்டின் முன் பகுதியில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார்.

இந்த நிலையில் நேற்று இரவு அதே பகுதியை சேர்ந்த முகமது அன்சாரி (24) என்ற இளைஞர் மளிகை கடைக்கு வந்து சிகரெட் கேட்டுள்ளார். கடைக்காரார் சுப்பிரமணி சிகரெட் இல்லை என்று கூறியதால், 2 ரூபாய்க்கு பீடி மட்டும் வாங்கிக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டார்.

சுமார் 15 நிமிடம் கழித்து மீண்டும் அப்பகுதிக்கு வந்த முகமது அன்சாரி, மதுபாட்டிலில் மண்ணெண்ணெய் நிரப்பி திரியை பற்ற வைத்து, மளிகை கடை மீது வீசினார். மண்ணெண்ணெய் குண்டு வெடித்ததில் கடையின் முன்பு அடுக்கி வைத்திருந்த 20 லிட்டர் தண்ணீர் கேன்கள் மற்றும் கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த தின்பண்டங்களும் எரிந்து கருகியது.

சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் சம்பவ இடத்தில் கூடியதால் முகமது அன்சாரி அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதுகுறித்து தான்தோன்றிமலை போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு வந்த தான்தோன்றிமலைபோலீசார் மண்ணெண்ணெய் குண்டு வீசிய இடத்தில் இருந்த தடயங்களை சேகரித்து,

தப்பியோடிய முகமது அன்சாரியை வலை வீசி தேடி வருகின்றனர்.

# மே மாதத்தில் பயன்பாட்டுக்கு வருகிறது கிளாம்பாக்கம் ரெயில் நிலையம்



கிளாம்பாக்கம், ஜன.21

வண்டலூர் அடுத்த கிளாம்பாக்கத்தில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள பேருந்து முனையத்தை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். கிளாம்பாக்கத்தில் இருந்து கோயம்பேடு, தாம்பரம், கிண்டி பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்ல வசதியாக மாநகர பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதையடுத்து கிளாம்பாக்கத்தில் பொதுமக்களின் வசதிக்காக ரெயில் நிலையம் அமைக்கப்படும் என கூறப்பட்ட நிலையில் அதற்கான பணிகளும் கடந்த ஒரு வருடமாக நடைபெற்று வருகிறது. இதனால் ரெயில் நிலையம் எப்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், கிளாம்பாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் ரெயில் நிலையம், மே மாதம் பயன்பாட்டுக்கு வரும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து 500 மீ. தொலைவில் 3 நடைமேடைகளுடன் ரெயில் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

# முசிறி சந்திரமவுலீஸ்வரர் கோவிலில் அதிசய தீர்த்த கிணறு கண்டுபிடிப்பு: பக்தர்கள் பரவசத்துடன் வழிபாடு



முசிறி, ஜன.21

திருச்சி மாவட்டம் முசிறியில் பிரசித்திபெற்ற சந்திரமவுலீஸ்வரர் கோவில் உள்ளது. 1000 ஆண்டுகள் பழமையான இந்த கோவில் குழந்தைப்பேறு, தொழிலில் அபிவிருத்தி அளிக்கும் பரிகார தலமாக திகழ்கிறது.

தனது சாபம் நீங்குவதற்காக சந்திரன் சிவபெருமானை வழிபட்டது, மிருகசீரிஷ நட்சத்திரக்காரர்கள் வழிபட வேண்டியது போன்ற பல்வேறு சிறப்புகளை இந்த கோவில் கொண்டுள்ளது. இந்த கோவிலில் தற்போது கும்பாபிஷேக திரு ப்பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இங்கு சமீபத்தில் அதிசய தீர்த்தக்கிணறு வெளிப்பட்டு பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தி உள்ளது. கோவிலின் தென் மூலை பகுதி பல ஆண்டுகாலமாக புதர் மண்டி காணப்பட்டது. அந்த பகுதி பெரியவர்கள் யாரும் அங்கு சென்றதில்லை. கோவிலின் ஒரு பக்கச்சுவர் மட்டும் அதில் தென்பட்டிருந்தது. பல ஆண்டுகளாகவே சிறு குழந்தைகள் கூட அந்த பகுதிக்கு செல்ல பயப்படுவார்களாம்.

புதர் மண்டி கிடந்ததால் அதன் உள்ளே என்ன இருக்கிறது என்பதை கூட யாரும் அறியவில்லை. இந்த சூழ்நிலையில் சமீபத்தில் திருப்பணி வேலைகளுக்காக அப்பகுதி சுத்தம் செய்யப்பட்டது. அப்போது அந்த புதருக்குள் அதிசய தீர்த்தக்கிணறு இருப்பதைகண்டு அப்பகுதியினர் அதிசயித்தனர். தீர்த்த கிணறின் மேல்பக்க சுவரின் 4 முனிவர்கள் காவல் காப்பது போன்ற சிற்பம் காணப்பட்டது. இந்த சூழலில் அங்கு நின்ற பக்தர் ஒருவர் மூலமாக அருள்வாக்கு வந்தது. அந்த அதிசய தீர்த்த குளத்தின் உள்ளே சுமார் 400 அடி ஆழத்தில் முசுகுந்த முனிவர் எனும் சித்தரும், 200 அடி ஆழத்தில் அவரது சீடர் நாதமுனி சித்தரும் தவம் இருப்பதாகவும், அவர்களது தவத்திற்கு சீடர்கள் 4 முனிவர்கள் காவலாக இருப்பதாகவும் அருள் வாக்கு வெளிப்பட்டது. இதை கேட்டு பக்தர்கள் மெய்சிலிர்த்து போயினர்.

இது தொடர்பாக பக்தர்கள் சிலர் கூறியதாவது:

இந்த கோவில் அருகே ஏற்கனவே ஒரு கிணறு உள்ளது. தற்போது புதிதாக துலங்கி உள்ள இந்த கிணற்றில் சித்தர்கள் தவம் இருப்பது குறித்து அருள்வாக்காக கிடைத்த தகவல் அதிசயிக்கத்தக்கதாகும். இந்த கிணறு வெளிப்பட்ட பின்னர் கோவில் திருப்பணிகள் அதிவேகத்தில் நடைபெற்று வருகின்றன.

மேலும் இங்குள்ள இறைவன் சந்திரமவுலீஸ்வரருக்கு தற்போது இந்த தீர்த்த கிணற்றில் இருந்துதான் தண்ணீர் எடுத்து அபிஷேகம் செய்யப்படுகிறது. மேலும் இந்த கோவிலின் பின்பக்கம் சித்தர் ஐக்கியமான சித்தர் பீடம் அமைந்திருப்பது இன்னும் சிறப்பக இருக்கிறது.

இந்த அதிசய தீர்த்த கிணற்றில் சித்தர்கள் வாசம் செய்வதால் இந்த கிணற்றை வணங்கி வருகிறோம். சித்தர்கள் தவம் இருக்கும் இடமாக இருப்பதால் இங்கு சத்தமின்றி அமைதியுடன் வணங்கி செல்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த கோவில் அர்ச்சகர் பரமேஸ்வர குருக்கள் கூறுகையில், எனக்கு விவரம் தெரிந்தவரை இந்த இடத்தில் இப்படியொரு அதிசய தீர்த்த கிணற்றை நான் பார்த்ததில்லை. இப்போது இந்த கிணறு வெளிப்பட்ட பின்னர் ஆச்சரியப்படும் அளவுக்கு பல்வேறு விசயங்கள் நடக்கின்றன. இதை சந்திர புஷ்கரணை தீர்த்தம் என்று அழைக்கிறோம். தற்போது திருப்பணி வேலைகள் நடப்பதால் இந்த கிணற்றை சுற்றிலும் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு உள்ளது என்றார்.

முசிறி நகரம் 10ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ மன்னன் முசுகுந்தனால் ஆளப்பட்டது. இந்த நகரின் ஆரம்பகால பெயர் "முசுகுந்தபுரி". இதுவே மருவி பின்னர் முசிறி என்று ஆனது. முசுகுந்த மன்னனே சித்தராகி கோவில் தீர்த்த கிணற்றில் ஐக்கியம் ஆகி தவத்தில் இருப்பதாக தகவல் வெளியாகி பக்தர்களை பரவசப்படுத்தி உள்ளது.

இதனிடையே புதிதாக துலங்கி உள்ள அதிசய தீர்த்த கிணற்றை பக்தர்கள் பக்தியுடன் சென்று பார்த்த வண்ணம் உள்ளனர். முசிறி மட்டுமின்றி அக்கம் பக்கத்து கிராமத்தினர், திருச்சி மாவட்டத்தை சேர்ந்த பலரும் கோவிலுக்கு வர தொடங்கி உள்ளனர்.

# சிற்பி வீட்டில் பூட்டை உடைத்து 27 பவுன் நகைரூ.80 ஆயிரம் ரொக்கம் கொள்ளை

சீர்காழி, ஜன.21

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அடுத்துள்ள சாயாவனம் மெயின்ரோடு அருகே வசிப்பவர் பழனிவேல் (வயது 45). இவர் கோவில் சிற்பம் மற்றும் சுதை வேலைகள் செய்து வருகிறார்.

இந்த நிலையில் பழனிவேல்தனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் வேளாங்கண்ணி கோவிலுக்கு நேற்று மதியம் புறப்பட்டார். பின்னர், தரிசனம் முடித்து விட்டு இரவு 11 மணி அளவில் அனைவரும் ஊர் திரும்பி உள்ளனர். அப்போது பழனிவேல் வீட்டிற்கு வந்து பார்த்த போது, வீட்டின் முன்பக்க கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கதவு திறந்து கிடந்தது.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த பழனிவேல் வீட்டில் உள்ளே சென்று பார்த்துள்ளார். அப்போது உள்ளே அறையின் மரக்கதவையும் மர்மநபர்கள் உடைத்திருந்தது தெரியவந்தது.

இதனால் மேலும் திடுக்கிட்ட பழனிவேல் அறையின் உள்ளே சென்று பார்த்தபோது, பீரோவை உடைக்காமல் அதில் வைக்கப்பட்டு இருந்த சுமார் 27 பவுன் நகைகள் மற்றும் ரூ.80 ஆயிரம் ரொக்கம் ஆகியவை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது. நகை, பணத்தை பறிகொடுத்த பழனிவேல் வேதனையில் துடித்துள்ளார்.

பின்னர், இதுகுறித்து அவர் பூம்புகார் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். உடனடியாக சீர்காழி துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜ்குமார் தலைமையில் பூம்புகார் இன்ஸ்பெக்டர் விஜயா மற்றும் போலீசார் நள்ளிரவு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது கொள்ளையர்கள் வீட்டின் கதவை உடைத்து பீரோவின் சாவியை தேடிப்பிடித்து, அதில் வைக்கப்பட்டிருந்த நகைபணத்தை கொள்ளை அடித்து சென்றது தெரியவந்தது.

இதனால் விசாரணையை துரிதப்படுத்திய போலீசார், அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி கேமராவை கைப்பற்றி, அதில் பதிவான காட்சிகளையும் ஆய்வு செய்து வருகின்றனர்.

மேலும், கைரேகை நிபுணர்கள், மோப்பநாய் உதவியுடன் மர்ம நபர்கள் குறித்துதடயங்கள்கிடைக்கின்றதா? என விசாரணை நடைபெற்று வருகிறது.

இதேபோல், கடந்த வாரம் திருவெண்காடு அடுத்துள்ள மங்கைமடம் கிராமத்தில் ஒருவரது வீட்டில் சுமார் 125 பவுன் நகைகள், வெள்ளி பொருட்கள், ரொக்கம் ஆகியவற்றை கொள்ளை நடத்துள்ள நிலையில், அதன் அருகில் சில கி.மீட்டர் தொலைவில் மற்றொரு வீட்டில் கொள்ளை நடந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# எரிவாயு குழாய் திட்டம்: 2 மாதமாக நீடிக்கும் விவசாயிகளின் காத்திருப்பு போராட்டம்



பல்லடம், ஜன.21

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள சுக்கம்பாளையம், கோடங்கி பாளையம் கிராமங்களில் ஐ.டி.பி.எல். எரிவாயு குழாய் திட்டத்தை விவசாய நிலங்களில் அமைக்காமல் சாலையோரமாக செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் இன்று 60வது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறியதாவது:

ஐ.டி.பி.எல்.நிறுவனம் கோவை முதல் கர்நாடகாவின் தேவனகொந்தி வரை எரிவாயு குழாய் கொண்டு செல்லும் திட்டத்தை அமைத்து கொண்டிருக்கிறது. இதற்கான அனுமதியை மத்திய அரசிடம் இருந்து பாரத் பெட்ரோலிய நிறுவனம் பெறவில்லை.

சட்டவிரோதமாக ஒரு அறிவிப்பை மட்டும் வழங்கி கோவை மாவட்டத்தில் கடந்த 1999ம் ஆண்டு பெட்ரோநெட் சி.சி.கே. திட்டத்திற்கு அனுபவ உரிமை எடுப்பு செய்ததை குறிப்பிட்டு , அதே இடத்தில் எண்ணெய் குழாய்களை பதித்து வருகிறது. பழைய திட்டத்திற்கு பெறப்பட்ட அனுமதியை வைத்து கொண்டு புதுத்திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி இல்லாமல் எண்ணெய் குழாய்களை பதித்து வருகின்றனர்.

அனைத்து வகையான எரிவாயு மற்றும் பெட்ரோலிய குழாய் பதிப்பு என்பது சாலையோரமாக மட்டுமே அமைக்க வேண்டும் என மத்திய அரசின் கொள்கை முடிவாக இருக்கிறது.

ஆனால் 25 ஆண்டுகளுக்கு முன் கோவை முதல் கரூர் வரை பதிக்கப்பட்ட குழாயின் அருகிலேயே மீண்டும் 70 கிலோ மீட்டர் அளவிற்கு மற்றொரு பெட்ரோலிய குழாய் அமைக்க வேலை செய்து வருகின்றனர்.

கோவை முதல் கர்நாடகாவின் தேவனகொந்தி வரை பெட்ரோலிய குழாய் கொண்டு செல்லும் திட்டத்தில் பெருமளவில் சாலையோரமாக பதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் கோவையில் இருந்து முத்தூர் வரை உள்ள 70 கிலோமீட்டரில் ஏற்கனவே குழாய் பதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களின் வழியே மீண்டும் பதிக்கத் திட்டமிட்டு செயல்படுகின்றனர். இதனை கண்டித்தும், எரிவாயு குழாய் திட்டத்தை சாலையோரமாக செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தியும் இன்று 60வது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஆவடி அருகே அண்ணன் தம்பி கொலை



ஆவடி, ஜன.21

ஆவடி அருகே உள்ள பட்டாபிராம் ஆயில் சேரி பஜனை கோவில் தெருவை சேர்ந்தவர் ரெட்டைமலை சீனிவாசன் (வயது 27). அவரது தம்பி ஸ்டாலின் (24). ரெட்டைமலை சீனிவாசன் மீது பூந்தமல்லி, ஆவடி. பட்டாபிராம் ஆகிய போலீஸ் நிலையங்களில் 10க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகளும், ஸ்டாலின் மீது பல அடிதடி வழக்குகளும் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று மாலையில் இருவரும் மது போதையில் இருந்துள்ளனர். அப்போது அந்த வழியாக வாகனங்களில் சென்றவர்களிடம் தகராறில் ஈடுபட்டு உள்ளனர். இதனால் ரெட்டைமலை சீனிவாசன், ஸ்டாலின் ஆகியோருக்கும், அப்பகுதியை சேர்ந்த வாலிபர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு உள்ளது. பின்னர் அந்த வாலிபர்கள் அங்கிருந்து சென்று விட்டனர்.


சிறிது நேரத்தில் அந்த வாலிபர்கள் தங்கள் நண்பர்களை அழைத்துக் கொண்டு அங்கு வந்தனர். 7 பேர் கொண்ட அந்த கும்பல், அண்ணன் தம்பி இருவரையும் பழிவாங்கும் நோக்கத்தில் கத்தி, அரிவாள் போன்ற ஆயுதங்களுடன் ஓட ஓட விரட்டி வெட்டினார்கள்.

முதலில் ரெட்டைமலை சீனிவாசனை வெட்டிய கும்பல், தொடர்ந்து ஸ்டாலினையும் கண்ணிமைக்கும் நேரத்தில் வெட்டி விட்டு தப்பி ஓடி விட்டனர். இதில் சம்பவ இடத்திலேயே அண்ணன் தம்பி இருவரும் உயிரிழந்தனர். இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து பிடிக்க ஆவடி துணை போலீஸ் கமிஷனர் ஐமன் ஜமால் தலைமையில், பட்டாபிராம் உதவி போலீஸ் கமிஷனர் சுரேஷ்குமார் மேற்பார்வையில் தனிப்படை அமைத்து ஆவடி போலீஸ் கமிஷனர் சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து தனிப்படை போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினார்கள். குற்றவாளிகள் யார் என்பதை கண்டறிய அந்த பகுதி மக்களிடம் விசாரணை நடத்தினார்கள். குடிபோதையில் தகராறு செய்ததால் தான் அண்ணன் தம்பி இருவரையும் தீர்த்து கட்டினார்களா அல்லது வேறு ஏதேனும் காரணமாக கொலை நடந்ததா என்று தீவிரமாக துப்பு துலக்கி வருகிறார்கள்.

மேலும் அந்த பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்களில் கொலையாளிகள் உருவம் பதிந்துள்ளதா என்பதையும் ஆய்வு செய்து வருகிறார்கள். தப்பி சென்ற குற்றவாளிகள் 7 பேரையும் பிடிக்க போலீசார் பல இடங்களுக்கும் சென்று தேடுதல் வேட்டையில் ஈடு பட்டுள்ளனர்.

# பஞ்சலிங்க அருவியில் குளிக்க தடை சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்



உடுமலை, ஜன.21

திருப்பூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக காலையில் பனியின் தாக்கமும், பகலில் வெயிலின் தாக்கமும் இருந்து வந்தது. சில நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்தநிலையில் இன்று காலை திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட உடுமலை, திருமூர்த்திமலை உள்பட பல்வேறு இடங்களில் சாரல் மழை பெய்தது. இதனால் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது.

திருமூர்த்திமலை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையின் காரணமாக பஞ்சலிங்க அருவியில் நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து அங்கு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். குளிக்க தடை விதிக்கப்பட்டதால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# கனமழை : அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் சாய்ந்து பாதிப்பு விவசாயிகள் கவலை



தஞ்சாவூர், ஜன.21

தஞ்சை மாவட்டத்தில் சம்பா, தாளடி சாகுபடி பணிகள் 3 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அறுவடை தொடங்கி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று இரவு தொடர்ந்து கனமழை பெய்தது. இதனுடன் கடும் பனிப்பொழிவும் நீடித்தது.

இரவு முழுவதும் பெய்த தொடர்மழையால் மாவட்டத்தில் தற்போது அறுவடைக்கு தயாராக இருந்த நூற்றுக்கனக்கான ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் வயலிலேயே சாய்ந்துள்ளது .

தஞ்சாவூர் வண்ணாரப்பேட்டை, 8 ம் நம்பர் கரம்பை, பூதலூர், ஆலக்குடி, கல்வராயன் பேட்டை , சித்திரக்குடி, சீராளூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அறுவடை செய்ய வேண்டிய சம்பா பயிர்கள் அதிகளவில் சாய்ந்து பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறும்போது, தஞ்சை மாவட்டத்தில் பருவம் தவறி பெய்த மழையால் அறுவடைக்கு தயாரான பயிர்கள் சாய்ந்துள்ளது. இன்னும் தொடர்ந்து மழை நீடித்தால் வயல்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படும். மேலும் மகசூலும் குறையும். ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் செலவு செய்தும் 25 மூட்டை கூட நெல்கிடைக்காது.எனவே பாதிப்பு பயிர்களை கணக்கீடு செய்து அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

# கொடைக்கானலில் கடும் பனி மூட்டத்துடன் கூடிய சாரல் மழை



கொடைக்கானல், ஜன.21

மலைகளின் இளவரசி எனப்படும் கொடைக்கானல் சர்வதேச சுற்றுலாத்தலமாகும். கொடைக்கானலில் தினந்தோறும் சீதோஷ்ண நிலை மாறி வரக்கூடிய நிலையில் டிசம்பர் 2வது வாரத்தில் இருந்து பகல் நேரங்களில் கடுமையான வெயிலும் இரவு நேரங்களில் உறை பனியுடன் கூடிய கடுங்குளிரும் நிலவும். ஆனால் இந்த ஆண்டில் சீதோஷ்ண நிலை முற்றிலுமாக மாறுபட்டுள்ளது.

இந்நிலையில் பகல் நேரங்களில் கடுங்குளிர் நிலவிவரக்கூடிய நிலையில் அவ்வப்போது சாரல் மழையும், கடும் பனிமூட்டமும் காணப்படுகிறது. நேற்று இரவு முதல் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் கடும் பனி மூட்டத்துடன் சாரல் மழை பெய்து வருகிறது.

குறிப்பாக நகர் பகுதிகளான ஏரிச்சாலை, அண்ணா சாலை, மூஞ்சிக்கல் மற்றும் அனைத்து மலைச்சாலைகளிலும் கடும் பனிமூட்டத்துடன்சாரல்மழை பெய்து வருவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

மேலும் வாகன ஓட்டிகளும் கடும் அவதிக்குள்ளாகினர். அவர்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டவாறு வாகனங்களை ஓட்டிச் சென்றனர்.

ஏரி சாலையில் இன்றும் கடும் பனிமூட்டம் நிலவி வருவதால் பனிமூட்டத்திற்கிடையே படகு சவாரி செய்து சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நேற்று அவ்வப்போது சாரல் மழை பெய்த நேரங்களில் மட்டும் படகுசவாரி நிறுத்தப்பட்டது. மீண்டும் மாலை தொடங்கிய மிதமான மழை இன்று பலத்த மழையாக பெய்து வருகிறது.

விடுமுறை தினமான இன்று சுற்றுலா பயணிகள் அதிகமாக விடுதிகளில் நிரம்பி வழிந்த நிலையிலும் விடாது கொட்டும் மழையினால் சுற்றுலா இடங்களை காண முடியாமல் தங்கள் அறையிலேயே முடங்கினர்.


பழனியிலும் கடந்த சில நாட்களாக கடும் பனி மூட்டம் காணப்பட்டது. அதிகாலை நேரங்களில் கடும் குளிர் நிலவியது. இந்நிலையில் நேற்று மாலை சாரல் மழையாக பெய்து பின்னர் கன மழையாக கொட்டித் தீர்த்தது.

பழனியை நோக்கி தற்போது பல்வேறு ஊர்களில் இருந்து பாதயாத்திரை பக்தர்கள் நடந்து வந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் இரவு நேரங்களில் தங்கள் பயணத்தை ஒதுக்கி வைத்து விட்டு ஆங்காங்கு உள்ள மண்டபங்களில் தங்கி ஓய்வெடுத்து வருகின்றனர்.

மாவட்டம் முழுவதும் பெய்த மழையினால் பல்வேறு இடங்களில் பாதயாத்திரை பக்தர்களும் மிகுந்த சிரமம் அடைந்தனர். ஒரு சில இடங்களில் ஒதுங்க இடமில்லாமல் ஆங்காங்கு கடைகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாரல் மழை பெய்த வண்ணம் இருந்தது. சிறுமலை, அடியனூத்து மற்றும் புறநகர் பகுதிகளில் இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கும் நிலை ஏற்பட்டது.

# விராலிமலை அருகே வீட்டில் சிலிண்டர் வெடித்து தீ விபத்து



விராலிமலை, ஜன.21

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அருகே உள்ள இலுப்பூர் பெருமாள் கோவில் கிழக்கு அக்ரஹாரம் பகுதியை சேர்ந்தவர் சவுமியா நாராயணன். இவருக்கு சொந்தமான வீட்டில் நேற்று இரவு திடீரென்று தீ பிடித்தது.

சமையல் அறையில் தீ பிடித்ததால் அங்கிருந்த சிலிண்டரும் வெடித்தது. இதனால் அங்கிருந்த பொருட்கள் எரிந்து சேதமாயின. சவுமியா நாராயணன் உள்ளிட்ட வீட்டில் இருந்தவர்கள் வெளியூர் சென்றிருந்தனர்.

இதனிடையே தீ விபத்து குறித்து தகவல் அறிந்த இலுப்பூர் தீயணைப்பு படையினர் நிலைய அதிகாரி மகேந்திரன் தலைமையில் விரைந்து சென்று தீயை அணைத்தனர். மேலும் நீராவி மூலம் சிலிண்டர் குளிர்விக்கப்பட்டது.

வீட்டில் இருந்த மற்றொரு காலி சிலிண்டர் வெளியே கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. இந்த தீ விபத்தில் வீட்டில் எவரும் இல்லாத காரணத்தினால் எவ்வித உயிர்சேதமோ எவருக்கும் தீக்காயமும் ஏற்படவில்லை. வீட்டின் மேற்கூரை ஓடுகள் சேதமாயின. மேலும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டதால் அருகில் உள்ள கட்டிடங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை.

தீ விபத்து நடைபெற்ற பகுதியை டி.எஸ்.பி. முத்துராஜ் பார்வையிட்டார்.

தொடர்ந்து போலீசார் இதுபற்றி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆவடி இரட்டை கொலை சம்பவம்: காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

சென்னை, ஜன.21

ஆவடி காவல் ஆணையரக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் நேற்று அடுத்தடுத்து அண்ணன்தம்பி சரமாரியாக வெட்டிக்கொலை செய்யப்பட்டனர். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக பட்டாபிராம் சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் ஜெகநாதன் பணியிடை நீக்கம் (சஸ்பெண்டு) செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் முழுவிவரம்:

சென்னை ஆவடியை அடுத்த பட்டாபிராம் அருகே உள்ள ஆயில்சேரி பஜனை கோவில் தெருவை சேர்ந்தவர் ரெட்டைமலை சீனிவாசன் (வயது 27). இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளது. இவரது தம்பி ஸ்டாலின் (24). இவர்கள் 2 பேர் மீதும் போலீஸ் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று மாலை ஸ்டாலின், ஆயில்சேரி மெயின் ரோடு ஜங்ஷனில் வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த மர்ம கும்பல் கண்ணிமைக்கும் நேரத்தில் பெரிய வீச்சரிவாளால் ஸ்டாலினை சரமாரியாக வெட்டினர். இதில் படுகாயம் அடைந்த ஸ்டாலின், சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் பரிதாபமாக உயிரிழந்தார். இதனை கண்டதும், அந்த வழியாக வந்த பொதுமக்கள் அலறி அடித்து ஓடினர். மர்மநபர்கள் ஸ்டாலினை வெட்டிக்கொலை செய்த காட்சிகள் அங்குள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது.



இதுகுறித்து தகவல் கிடைத்ததும் பட்டாபிராம் சரக போலீஸ் உதவி கமிஷனர் சுரேஷ்குமார், இன்ஸ்பெக்டர் ஜெகநாதன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். கொலையான ஸ்டாலின் உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துவிட்டு, போலீசார் அங்கு நின்று விசாரித்து கொண்டிருந்தனர்.

அப்போது அதே பகுதியில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் ஆயில்சேரி தனலட்சுமி நகர் அருகே உள்ள மாந்தோப்பில் ரெட்டைமலை சீனிவாசனும் படுகொலை செய்யப்பட்டு இருப்பதாக போலீசாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து இரவு சுமார் 8.30 மணியளவில் அங்கிருந்த போலீசார், மாந்தோப்புக்குள் சென்று இருட்டில் தேடி பார்த்தனர்.

மாந்தோப்புக்குள் உள்ள புதரில் ரெட்டைமலை சீனிவாசன் அரிவாளால் சரமாரியாக வெட்டி கொலை செய்யப்பட்டு கிடப்பது தெரிந்தது. ஆனால் ரெட்டைமலை சீனிவாசன் உடல் கிடந்த இடம் ஆவடி போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்டது என்பதால் இதுகுறித்து ஆவடி போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி வழக்குப் பதிவு செய்து இரட்டைமலை சீனிவாசன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் அண்ணன், தம்பி இருவரும் அடுத்தடுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும், பொதுமக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியது. ஸ்டாலின் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பட்டாபிராம் போலீசாரும், ரெட்டைமலை சீனிவாசன் கொலை தொடர்பாக ஆவடி போலீசாரும் இரு வழக்குகள் பதிவு செய்து இருவரையும் வெட்டிய மர்ம கும்பல் யார்? உள்ளூர் நபர்களா? அல்லது வெளியாட்களா? முன்விரோதம் காரணமாக வெட்டி படுகொலை செய்யப்பட்டனரா? தொழில் போட்டி காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகின்றனர். ஆவடி போலீஸ் கமிஷனர் சங்கர் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு குற்றவாளிகளை தீவிரமாக தேடிவருகின்றனர்.

# ஏகனாபுரம் அம்பேத்கர் திடலில் மக்களை சந்திக்கிறார் விஜய்

சென்னை, ஜன.21

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்காக பரந்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள 13 கிராமங்களில் இருந்து 5,183 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. அரசு கையகப்படுத்த இருக்கும் இடங்கள் விளை நிலங்களாகவும், ஏரி, குளங்களாக இருப்பதால் இந்த திட்டத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகின்றனர்.

இதில் பரந்தூர், ஏகனாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் நிலங்கள் பெருமளவில் கையகப்படுத்தப்படுவதால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் தீவிர போராட்டத்தை கையில் எடுத்துள்ளனர். பொதுமக்களின் போராட்டம் 900 நாட்களாக நடந்து வருகிறது. இதனால் போராட்டம் நடந்து வரும் பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களுக்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராக போராடும் மக்களை நாளை (திங்கட்கிழமை) விஜய் சந்திக்க இருக்கிறார். இதற்கான அனுமதியை போலீசார் வழங்கியுள்ளனர். அதிக அளவில் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் படி அறிவுரை வழங்கி இருக்கிறார்கள். கட்சி தொடங்கிய பிறகு முதல் முறையாக விஜய் மக்களை சந்திக்கும் நிகழ்வு என்பதால் அதற்கான ஏற்பாடுகளை தவெகவினர் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், பரந்தூர் விமான நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வரும் மக்களை காஞ்சிபுரம் மாவட்டம் ஏகனாபுரத்தில் உள்ள அம்பேத்கர் திடலில் வைத்து தவெக தலைவர் விஜய் நாளை சந்திக்கிறார். காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை கேரவனில் இருந்தபடியே விஜய் உரையாற்ற உள்ளார். மக்களை சந்திப்பதற்கான இடத்தை முடிவு செய்வது பற்றி நீண்ட இழுபறி நிலவி வந்த நிலையில், அம்பேத்கர் திடல் தேர்வு செய்யப்பட்டது.

# சென்னை: குப்பையில் கிடந்த ஐபோன், தங்க செயினை மீட்ட தூய்மை பணியாளர்களுக்கு குவியும் பாராட்டு

சென்னை, ஜன.21

சென்னை பெருங்குடி பகுதியில் உள்ள பொன்னப்பன் கிராஸ் தெருவில் பணிபுரியும் தூய்மை பணியாளர் சின்னம்மாள் என்பவர், குப்பையில் கிடந்த 1 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஐபோனை கண்டுபிடித்தார். இது குறித்து அவர் தனது மேலதிகாரியிடம் தெரிவித்தார். ஐபோன் மொபைல் நம்பர் மூலம் அதன் உரிமையாளரான நீலா மணிகண்டனை கண்டுபிடித்து ஐபோன் ஒப்படைக்கப்பட்டது.



இதேபோல் 70 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 8 கிராம் தங்க செயினை குப்பையில் இருந்து மீட்ட இருதயமரி என்ற தூய்மை பணியாளர், அதனை தனது மேலதிகாரியிடம் தெரிவித்தார். இதையடுத்து அந்த தங்க செயின் கே.கே. நகர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. நேர்மையுடன் செயல்பட்ட 2 தூய்மை பணியாளர்களுக்கும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை; 3 பேர் கைது

கோவை, ஜன.21

கோவையை அடுத்த கோவைப்புதூரில் உள்ள மைதானத்தில் பொங்கல் விழாவையொட்டி சம்பவத்தன்று நள்ளிரவில் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமானோர் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சியை பார்த்து ரசித்தனர். பின்னர் நிகழ்ச்சி முடிந்ததும் அனைவரும் வீடு திரும்பினர். அப்போது அந்த பகுதியை சேர்ந்த 20 வயதான இளம்பெண், தனது வீட்டுக்கு தனியாக நடந்து சென்று கொண்டு இருந்தார்.

அந்த வழியாக மோட்டார்சைக்கிளில் 3 பேர் வந்தனர். அவர்கள் இளம்பெண் தனியாக நடந்து செல்வதை பார்த்ததும் மோட்டார் சைக்கிளை நிறுத்தினர். பின்னர் அவர்கள் அந்த இளம்பெண்ணிடம் ரூ.1,000 தருகிறோம், எங்களுடன் வா என்று கூறியதுடன், பாலியல் தொல்லை கொடுத்ததாக தெரிகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த இளம்பெண், அவர்களிடம் எதிர்ப்பு தெரிவித்து சத்தம் போட்டார்.

இதற்கிடையில் அந்த 3 பேரை அந்த பகுதியில் உள்ள தெருநாய்கள் பார்த்து குரைத்து கொண்டே இருந்தன. நாய்களின் சத்தம் கேட்டு அந்த இளம்பெண்ணின் தாயார் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்தார். அப்போது தனது மகளுக்கு அவர்கள் பாலியல் தொல்லை கொடுப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உடனே அவர் தனது மகளை நோக்கி ஓடி வந்தார். பின்னர் அவர் தனது மகளை வீட்டுக்கு அழைத்து சென்றார். இருந்தபோதிலும் அந்த 3 பேரும் அங்கிருந்து செல்லாமல் அந்த இளம்பெண்ணின் வீட்டின் அருகே சென்றனர்.

அதை பார்த்ததும் இளம்பெண்ணின் தாயார், தந்தை ஆகியோர் அவர்களை தட்டிக்கேட்டனர். இதில் ஆத்திரம் அடைந்த 3 பேரும் சேர்ந்து இளம்பெண் உள்பட 3 பேரையும் தாக்கியதுடன், அவர்களை கீழே தள்ளிவிட்டு அங்கிருந்து சென்றனர். இதுகுறித்த புகாரின்பேரில் குனியமுத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

அதில் இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்தது அதே பகுதியை சேர்ந்த ஆட்டோ டிரைவர்களான கண்ணன், பாபு, ரவி என்பது தெரியவந்தது.

அவர்களை போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி கோவை மத்திய சிறையில் அடைத்தனர்.


# சாதம் வடித்த கொதிநீரில் தவறி விழுந்த 3 வயது குழந்தை பலி

மதுரை, ஜன.21

மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி அருகே உள்ள குன்னாரம்பட்டியை சேர்ந்தவர் கேப்டன் பிரபாகரன். இவருடைய மனைவி அன்னக்கிளி. இவர்களுக்கு 3 குழந்தைகள். இந்த நிலையில் மாட்டுப்பொங்கல் அன்று சாதம் வடித்த கொதிநீரை அன்னக்கிளி அருகில் வைத்திருந்தார்.

அப்போது அங்கு விளையாடி கொண்டிருந்த அவருடைய மகன் நிவிநேஷ் (வயது 3) எதிர்பாராதவிதமாக கொதிநீரில் தவறி விழுந்தான். இதில் உடல் வெந்து அலறி துடித்தான். உடனடியாக அவனை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டான். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நிவிநேஷ் பரிதாபமாக இறந்தான். இது குறித்து கொட்டாம்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# 'பாட்டல் ராதா' படம் மதுவால் ஏற்படும் பாதிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் இயக்குநர் பா. ரஞ்சித்





இயக்குனர் பா.ரஞ்சித் நீலம் புரொடக்சன்ஸ் சார்பில் தயாரித்துள்ள திரைப்படம் 'பாட்டல் ராதா'. இந்த படத்தை பா.ரஞ்சித்தின் உதவி இயக்குனர் தினகரன் சிவலிங்கம் இயக்கியுள்ளார். இந்த படத்தில் குரு சோமசுந்தரம், சஞ்சனா நடராஜன், ஜான் விஜய் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

மதுப்பழக்கத்தால் சீரழியும் நாயகனின் கதையாக 'பாட்டல் ராதா' படம் உருவாகியுள்ளது. இப்படம் வரும் 24ம் தேதி வெளியாகவுள்ள நிலையில், டிரெய்லர் வெளியீட்டு நிகழ்வில் படக்குழுவினர் மற்றும் இயக்குநர்கள் அமீர், வெற்றி மாறன், மிஷ்கின், லிங்குசாமி, பா. ரஞ்சித் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பேசிய இயக்குநர் பா. ரஞ்சித், ' தினகரன் சிவலிங்கம் என் கல்லூரித் தோழன். நாங்கள் எல்லாரும் ஒன்றாகத்தான் சினிமாவுக்கு வந்தோம். முதலில் நான் இயக்குநராகிவிட்டேன். தினகரனையும் ஜெயக்குமாரையும் (ப்ளூ ஸ்டார் இயக்குநர்) அனிமேஷன் இயக்குநர்களாக மாறச்சொன்னேன். ஆனால், அவர்கள் சினிமா இயக்குநராக மாறிவிட்டனர். படத்தின் கதையை தினகரன் சிறப்பாக எழுதியுள்ளார்.

நான் 12வது படிக்கும்போது தற்கொலை செய்யலாம் என முயற்சித்தேன். காரணம், என் அப்பா பெரிய குடிப்பழக்கத்தில் இருந்தார். அதனால், என் அம்மா மிகக்கஷ்டப்பட்டார். இதைப்பார்த்து என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால், எப்படியோ தற்கொலை எண்ணத்திலிருந்து மீண்டேன். என் தந்தை மிக நல்லவர், எங்களுக்காக அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்தார். ஆனால், குடி அவரை சீரழித்தது. அதனாலேயே, கிட்னி செயலிழந்து உயிரிழந்தார். பாட்டல் ராதா கதையைப் படிக்கும்போது பல இடங்களில் உணர்ப்பூர்வமாக இருந்தது. குடி ஒரு நோய் என்பது புரியவே நீண்ட நாள்கள் ஆகிவிட்டது. இந்தப் படம் ரசிகர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.' எனத் தெரித்தார்.

# ஜிவி பிரகாஷ் நடிக்கும் 'கிங்ஸ்டன்' படத்தின் படப்பிடிப்பு நிறைவு




ஜி.வி. பிரகாஷ் குமார் நடிப்பில் உருவாகும் அவரது 25வது படத்திற்கு 'கிங்ஸ்டன்' என்று தலைப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த படத்தை ஜி.வி. பிரகாஷின் பேரலல் யுனிவர்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டூடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரித்து உள்ளன. கிங்ஸ்டன் படத்தை இயக்குனர் கமல் பிரகாஷ் எழுதி, இயக்கியுள்ளார். இது ஜி.வி. பிரகாஷ் தயாரிக்கும் முதல் படம். இந்த படத்தில் நடிகை திவ்யபாரதி, ஜி.வி.பிரகாஷுக்கு ஜோடியாக நடிக்க உள்ளார். பேச்சுலர் படத்திற்கு பிறகு இந்த ஜோடி மீண்டும் இணைந்து உள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பை நடிகர் கமல்ஹாசன் சென்னையில் கடந்த ஆண்டு நவம்பர் 10ம் தேதி தொடங்கி வைத்தார். கடல் பின்னணியில் திகில் சாகச படமாக உருவாகி வரும் இந்த படத்தில் கடலில் உள்ள மர்மத்தை கண்டறியும் மீனவரின் கதாபாத்திரத்தில் ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ரசிகர்களிடம் இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் வெளியாகி வைரலானது.

இந்த நிலையில், 'கிங்ஸ்டன்' படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஜிவி பிரகாஷ் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். இப்படம் மார்ச் 7ம் தேதி வெளியாகிறது.

# நானியின் 'கோர்ட்' பட ரிலீஸ் தேதி அறிவிப்பு

தெலுங்கு திரையுலகில் முன்னணி இளம் நடிகராக வலம் வருபவர் நானி. இவர் அடுத்தடுத்து புதுப்புது கதை அம்சம் கொண்ட திரைப்படங்களில் நடித்து அசத்தி வருகிறார். இவரது முந்தைய படங்களான 'ஷியாம் சிங்கா ராய்', 'அடடே சுந்தரா' திரைப்படம் அமோக வரவேற்பினைப் பெற்றது. நானியின் 30வது படமாக 'ஹாய் நான்னா' படம் கடந்தாண்டு இறுதியில் வெளியானது. இதில் நானியுடன் மிருணாள் தாக்குர் நடித்திருந்தார். 'சூர்யாவின் சனிக்கிழமை' திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்று உலகம் முழுவதும் ரூ.100 கோடி வசூலித்து அசத்தியது.

'நடிகர் நானி, இயக்குனர் ராம் ஜெகதீஷ் கூட்டணியில் 'கோர்ட்' படம் உருவாகியுள்ளது. இப்படத்தில் பிரியதர்ஷி புலிகொண்டா முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், 'கோர்ட்' படத்தின் ரிலீஸ் தேதியை வால் போஸ்டர் சினிமா தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளது. இப்படம் மார்ச் 14ம் தேதி வெளியாகிறது.

# ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை: வெஸ்ட் இண்டீசை 44 ரன்களில் சுருட்டிய இந்தியா



2வது ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியாவில் தொடங்கியது. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீசுடன் விளையாடி வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்திய அணியின் கேப்டன் நிக்கி பிரசாத் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் வீராங்கனைகள் இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவில் ஆட்டமிழந்து வெளியேறினர். வெறும் 13.2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் 44 ரன்களில் சுருண்டது. அந்த அணியில் 2 பேர் மட்டுமே இரட்டை இலக்க ரன்களை தொட்டனர். அதிகபட்சமாக கெனிகா கசார் 15 ரன்கள் அடித்தார்.

சிறப்பாக பந்துவீசிய இந்தியா தரப்பில் பருனிகா சிசோடியா 3 விக்கெட்டுகளும், ஜோஷிதா மற்றும் ஆயுஷி சுக்லா தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீசில் 3 வீராங்கனைகள் ரன் அவுட் ஆனது அந்த அணிக்கு பின்னடைவாக அமைந்தது.

இதனையடுத்து 45 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி இந்தியா களமிறங்க உள்ளது.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; கார்லஸ் அல்காரஸ் காலிறுதிக்கு முன்னேற்றம்



கிராண்ட்ஸ்லாம்' என்ற உயரிய அந்தஸ்து பெற்ற ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) பிரிட்டனின் ஜாக் டிராப்பர் உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் இரு செட்களை 75, 61 என்ற புள்ளிக்கணக்கில் கார்லஸ் அல்காரஸ் கைப்பற்றினார். தொடர்ந்து 3வது செட் தொடங்கும் முன்னர் ஜாக் டிராப்பர் காயம் காரணமாக போட்டியில் இருந்து வெளியேறினார். இதன் காரணமாக கார்லஸ் அல்காரஸ் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை: வெஸ்ட் இண்டீசை வீழ்த்தி அபார வெற்றி பெற்ற இந்தியா




2வது ஜூனியர் மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீசுடன் இன்று மோதியது. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இந்திய அணியின் கேப்டன் நிக்கி பிரசாத் முதலில் பந்துவீசுவதாக அறிவித்தார்.

இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி, இந்தியாவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது. வெறும் 13.2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த வெஸ்ட் இண்டீஸ் 44 ரன்களில் சுருண்டது. அந்த அணியில் 2 பேர் மட்டுமே இரட்டை இலக்க ரன்களை தொட்டனர். அதிகபட்சமாக கெனிகா கசார் 15 ரன்கள் அடித்தார்.

சிறப்பாக பந்துவீசிய இந்தியா தரப்பில் பருனிகா சிசோடியா 3 விக்கெட்டுகளும், ஜோஷிதா மற்றும் ஆயுஷி சுக்லா தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். வெஸ்ட் இண்டீசில் 3 வீராங்கனைகள் ரன் அவுட் ஆனது அந்த அணிக்கு பின்னடைவாக அமைந்தது.

இதனையடுத்து 45 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களம் இறங்கிய இந்தியா 4.2 ஓவரில் 1 விக்கெட்டை மட்டும் இழந்து 47 ரன்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் சானிகா சால்கே 18 ரன், கமலினி 16 ரன் எடுத்தனர். இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் வரும் 21ம் தேதி மலேசியாவை எதிர்கொள்கிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.